# உளநலமுடன் நாம்..........

## (சமூக உளவியல் சார் ஆக்கங்கள்)



9ம் அணி, உளசமூக கற்கை நெறி மாணவர்கள்
துளிர்கள் உள சமூகமேம்பாட்டு நிறுவனம்
30, கம்பஸ் லேன், திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள நலமுடன் நாம்..........

## [சமூக உளவியல் சார் ஆக்கங்கள்]


☛ துளிர்கள் நிறுவனத்தின் உள சமூக செயற்பாடுகள் பற்றிய ஒரு நோக்கு 01-02

K.T. வசந்தன் BA (Hons) DRA SPL)

☛ அரங்காற்றுகையூடாக ஆற்றுப்படுத்தல் 03-05

K.T. வசந்தன் BA (Hons) DRA SPL)

☛ சிறுவர் உரிமைகளும் கடமைகளும் 06-07

இ. ராஜ்குமார்

☛ இன்றைய நவீன உலகில் இளைஞர் யுவதிகளும் இலங்கையின் கலாச்சார சீரழிவுகளும் 08-12

பொ. சசிகலா

☛ குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யுங்கள்........ 13-14

ர. மாலினி

☛ அதிகரித்துவரும் தற்கொலைகளும் அவை ஏற்படுத்தும் தாக்கங்களும் தீர்வுகளும் 15-17

கி. சரண்யா

☛ தற்கால சிறுவர்களின் நிலை..................? 18-21

(J/187 சங்குவேலி கிராமத்துச் சிறுவர்களை மையமாகக் கொண்ட கள ஆய்வு

தொகுப்பு : K.T. வசந்தன் BA (Hons) DRA SPL)

நேரடிக் கள ஆய்வு : (குழு ii 9ம் அணி உள சமூக கற்கைநெறி மாணவர்கள்)



9ம் அணி உள சமூக கற்கைநெறி மாணவர்கள்

துளிர்கள் உளசமூக மேம்பாட்டு நிறுவனம்


30, கம்பஸ் லேன், திருநெல்வேலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆழ்கடலில் அழுபவரை கரை சேர்த்திடும் ஓடமாகவும்
## சேவை செய்யும் சேய்களை உருவாக்கும் கூடமாகவும் செயற்படும்

# துளிர்கள் நிறுவனத்தின் உளசமூக செயற்பாடுகள் பற்றிய ஒருநோக்கு



சமூகமேம்பாட்டினை இலக்காகக் கொண்டு பணிப்பாளர் கே.எஸ். ரகுநாதன் அவர்களால் 2004 யூலை 20ம் திகதியில் ஆரம்பிக்கப்பட்டு நல்லூர் பிரதேச செயலகத்தில் பதியப்பட்டு சிறுவர், பெண்கள், இளையோர், முதியோர்களுக்காக உளசமூகமேம்பாட்டு நிறுவனமாகத் துளிர்கள் நிறுவனம் துலங்கிக் கொண்டிருக்கிறது. சிறுவர்கள், பெண்கள் இளைஞர்கள் முதியோர் சீருடன் வாழ்வதற்கு உடனிருந்து உளமறிந்து மேம்படச்செய்கின்றது. மக்களின் மனங்களை துன்பங்கள் மன இறுக்கங்களிலிருந்து விடுவித்து மகிழ்வான மனநிலையோடு இருக்கக்கூடிய உளஆற்றுப்படுத்துனரை உருவாக்கும் நோக்கில் உளசமூகமேம்பாட்டுவாண்மைத்துவக் கற்கைநெறி 2006ம் ஆண்டு முதல் இறுதிநாட்களான சனி, ஞாயிறு தினங்களில் காலை 9.30 மணி தொடக்கம் 1.30 மணி வரை பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் வைத்தியகலாநிதிகள், உளசமூகபாண்டித்தியம் வாய்ந்த சமூக உளவியல் புலமையாளர்களை வளவாளராக கொண்டு மாணவர்கட்கு உடல், உளம் சார்பயிற்சிகளை வழங்கி தன்னைத்தான் அறிந்து சுயவிழிப்புணர்வு பெறவும் பிறரைபுரிந்துகொண்டு அவர்களின் மனவடுக்கள், பிரச்சனைகட்கான வழிகாட்டல், ஆலோசனைவழங்கக்கூடிய பல உளஆற்றுப்படுத்துனர்களை வருடாந்தம் கற்கைநெறிமூலம் உருவாக்கி சமூகமேம்பாட்டுக்கு இந்நிறுவனம் தன்னாலான பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

உளஆற்றுப்படுத்தல் கற்கைநெறி மாணவர்கள் மூலம் கற்றல் பயிற்சிக்காகவும், சமூகவிழிப்புணர்வு, சமூகத்தேவையை மேம்படுத்தும் நோக்கில் உளவியல்சார் ஆய்வுக்கட்டுரைகள், களஆய்வுகள், உளவியல் தேவைநாடும் நபர்களுக்கான உளசமூக மேம்படுத்தல் பயிற்சிகள், களஆய்வுகள், பயிற்சிபட்டறைகள் மாத்திரமன்றி விழிப்புணர்வு, ஆலோசனை, வழிகாட்டலை வழங்கும் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகை பிரசுரங்கள், துண்டுப்பிரசுரங்கள், குறும்படங்கள், தெருவெளி ஆற்றுகைகள் என பல்பரிமாண நிலையில் தனது சமூகதன்னார்வ பணிகளை வருடாந்தம் இவ்நிறுவனம் நிகழ்த்தி வருகின்றது.

இவ்நிறுவனத்தின் 5வது ஆண்டு விழாவில் "பொக்கிஷம்" என்னும் பல்துறை சார்ந்த நூலும் 6வது ஆண்டு நிறைவில் இன்றைய சமூகத்தை ஆட்கொண்டிருக்கும் "இளவயதுத் திருமணம் அதனால் எதிர்கொள்ளப்படும் பிரச்சனைகள்" எனும் கருத்தை முன்வைத்து "மின்மினி" எனும் குறும்படம் வெளியிடப்பட்டது. 7வது ஆண்டுநிறைவில் கைத்தொலைபேசியின் தவறான பாவனையால் ஏற்படும் விபரீதங்களை மையப்படுத்தி "றிங் றிங்" குறும்படம் வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8வது ஆண்டு நிறைவில் பெற்றவர்களின் சரியான வழிநடத்தலின்றி பிள்ளைகள் தமது வாழ்வைத்தாமே தீர்மானித்து சீரழிந்து போகின்ற தன்மையை மையப்படுத்தி "சொந்தமென்ன பந்தமென்ன" என்ற குறுந்திரைப்படமும் சிறுவர்உளவியல் மற்றவர் புரியாமல் இருப்பதால் ஏற்படும் விபரீதத்தை மையப்படுத்தி பணிப்பாளர் கே. எஸ். ரகு அவர்களின் கதை, வசனம், பாடல், தயாரிப்பில் "பூமாலை" எனும் குறும்படம் பிரதமவிருந்தினராக கலந்துகொண்ட யாழ்மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. ரூபினி வரதலிங்கத்தால் வெளியிட்டு வைக்கப்பட்டது மேலும் மதுஒழிப்பு, டெங்கு, எயிட்ஸ் சம்பந்தமான நடன இசைநிகழ்வுகள், உறவுகளின் வருகைக்காக ஏக்கத்துடன் காத்திருக்கும் கைதடி அரச சாந்தி இல்லமுதியோர்களின் மனங்களை அமைதியாக்கி சந்தோஷப்படுத்தும் கலை நிகழ்வுகளை முதியோர் தினநிகழ்விலே துளிர்கள் நிறுவனத்தொண்டர்கள் வருடாந்தம் வழங்கி வருகின்றார்கள். மேலும் கிராமங்கள் தோறும் களசந்திப்புக்கள் பயிற்ச்சிப்பட்டறைகள் மூலம் குடும்ப ஒற்றுமை, சிறாரின் உளநலம் பேணல், ஏழைச்சிறாரின் கல்விவிருத்திக்கான ஆலோசனைகள், உதவிகள் என தம்மால் இயன்ற பணிகளை இந்நிறுவனம் செய்துவருகின்றது.

"சிறுவர்கள், பெண்கள், இளைஞர்கள் சீருடன் வாழ்வதற்கும், ஆழ்கடலில் அமுபவரை கரைசேர்ப்பதற்கும் சேவைசெய்யும் சேய்களை வருடார்ந்தம் உளஆற்றுப்படுத்தல் கற்கைநெறிமூலம் உருவாக்கி சமூகமேம்பாட்டுக்கு உதவிவருகின்றது. 10ஆண்டு நிறைவுநிகழ்வும் 9ம்,10ம் அணி உளசமூககற்கைநெறியை செய்த மாணவர்களுக்குமான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் 2013 யூலை 27ம் திகதி நடைபெறுகின்றது. நிறுவனபணிப்பாளர் கே. எஸ். ரகுநாதன் சமூகசேவைகளின் தன்னம்பிக்கை, சமூகமேம்படுத்தல் இலக்கினை செயல்வடிவமாக செய்துவரும் நிறுவனத்திடம் பல நலத்திட்டங்கள் நிதிவளம் இன்மையால் முடங்கிக்கிடக்கின்றன. இவ்சமூகநற்பணிகள் நிறைவேற அரச, அரசசார்பற்ற தன்னார்வநிறுவனங்கள், கல்வியாளர், உளவியலாளர் சமூகஅக்கறை உடையோர், வசதிபடைத்த நல்உள்ளங்களின் உதவிக்கரங்களே. துளிர்கள் நிறுவனப்பணிப்பாளர், தொண்டர்களின் எதிர்பார்ப்பும் காலத்தின் தேவையாகவும் அமைகின்றது.

தொகுப்பு:-
K.T. **வசந்தன்.** [BA(Hons) DRASPL]
(துளிர்கள் நிறுவன 9ம்அணிமாணவன்).







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கம் : K.T. வசந்தன் BA (Hons) DRA SPL)
(துளிர்கள் நிறுவன மாணவன்)

# அரங்காற்றுகையூடாக ஆற்றுப்படுத்தல்
## *Counselling through Drama and Theatre*

**ஆற்றுப்படுத்தலுக்கான அறிமுகம் :**

மனிதனுக்கு தேவையானது ஆரோக்கியமான மகிழ்ச்சி தான். மனித தேவைகள் பூர்த்தியாகும் போது ஆரோக்கியமான மகிழ்ச்சி பிறக்கும். மனித வாழ்வின் மகிழ்ச்சிக்கு நிறைவான பணம், பொருள், பண்டங்கள். பட்டம், பதவிகள் இருந்தால் மட்டும் போதாது. இவற்றை அனுபவிக்கும் மனநிலை, நம்பிக்கை அவசியமாகின்றது. இன்று மனிதன் "இயற்கையின் சீற்றத்தினாலோ, போரின் தாக்கத்தினாலோ, உறவின் இழப்பினாலோ, சமூக, சமுதாய முரண்பாட்டினாலோ மனதளவில் பாதிப்பிற்கு உள்ளாகின்றான். இவ் நெருக்கீட்டுச் சூழலின் மனநிலையில் தன்னம்பிக்கை வாழ்வை கட்டி எழுப்பி மனவடுக்களிலிருந்து ஒருவரை மீட்க ஆற்றுப்படுத்தலை மேற்கொள்வது சாலச்சிறந்ததெனலாம்.

ஆற்றுப்படுத்தல் என்பதை நோக்குவோமாயின் 1945இல் குட் (Good) என்பவர் "தனிப்பட்ட கல்வி தொழில் சமூக பிரச்சினைகளில் அடங்கியுள்ள உண்மைகளை ஆராய்ந்து பகுப்பாய்வு செய்து, தீர்வு காண உதவுவது" என்கிறார். மேலும் நபரொருவர் மற்றொரு நபரின் இணக்கப் பிரச்சினைகளை (Adjustment Problems) புரிந்து கொள்ளவும், தீர்த்துக் கொள்ளவும் உதவுகின்ற முயற்சி என்கின்றார். 1951இல் ரென் என்பவர் "இருவர் அல்லது இரு குழுக்களுக்கு இடையிலான நோக்கமுள்ள பரஸ்பர உறவுநிலை இது ஒருவர் மற்றவர் சூழலுக்கு மாறுதல் அல்லது மாற்றமடையச் செய்ய உதவுகிறது" என்கிறார். 1962 இல் அமெரிக்க உளநலசசங்கம் கூறுமிடத்து "ஒருவர் தனது உளவளங்களின் முழுமையான விருத்தியை நோக்கிச் செல்லுகின்ற பயணத்தில் சந்திக்கின்ற தடைகளை தகர்ந்து வெற்றிப்பாதையை நோக்கிச் செல்ல உதவும் செயற்பாடே" ஆற்றுப்படுத்தல் என்கிறார். அதாவது நபரிடையே முடியாது இயலாது என்ற மனநிலையை தகர்த்து தன்னால் முடியும் என்ற மனத்திடம் கொண்டு இலக்கை அடைய வழி சமைப்பது எனலாம். ஆதிகால மனிதன் முதல் தற்கால மனிதன் வரை அவனது அடிப்படைத்தேவையில் ஆற்றுப்படுத்தல் தவிர்க்கமுடியாததொன்றாக காணப்பட்டது. ஆதிகால மனிதனின் தேவைகள் மட்டுப்படுத்தப்படுவதால் அவனது இலக்கு உணவுத்தேவை, பாலியற்தேவையாக இருந்தது. அவை நிறைவு செய்யப்பட்டதும் மனமகிழ்ச்சி அடைந்தான்.

**அரங்கில் ஆற்றுப்படுத்தல் அதிசயம் :**

அரங்கு என்பது பார்க்கும் இடம், செய்யும் இடம் என்ற பொருளில் நோக்கப்படுகின்றது. இது ஏதோ ஒன்றினை நிகழ்த்துவதற்கு அடிப்படையாக அமைகின்றது. செயல் / நிகழ்வு, இடம் / அரங்கு, காலம் / நேரம் எனும் அரிஸ்ரோட்டில்ஸ் கூறும் நாடகமும்மைகள் முதன்மைப்படுகின்றது. அரங்கு என்பது வெறுமனே நிகழ்த்தும் இடத்தினை சுட்டுவதல்ல. அதனுள் மனித மனங்களின் கடந்தகால, நிகழ்கால, எதிர்கால வாழ்வியல் அனுபவங்கள் நிறைந்த நிகழ்வுகளாக நாடகங்கள் பொதிந்து காணப்படுகின்றன. இன்று அரங்கு (Theater) என்பது உடல், உள நன்நிலையை பிரதிபலிப்பனவாக சமூகமட்டங்களில் காணப்படுகின்றன. வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை செய்யும் theaterல் நோயாளியின் உடல் வருத்தம் குறைக்கப்படுகின்றது, Film பார்க்கும் theaterல் உளம்சார் மனவலிமை, மகிழ்ச்சி கிடைக்கிறது. Drama பார்க்கும் theaterல் பார்வையாளருக்கு

உளநலமுடன் நாம்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல், உளம் சார் சிகிச்சை தாராளமாக கிடைக்கின்றது. மேற்கூறிய மூன்று இடங்களிலும் நிகழ்த்துவோர், பங்குபற்றுவோர் தொடர்புபட்டு உடல், உளம் சார் நன்நிலை பேணப்படுகின்றது. நாடகத்தில் மனித மனங்களில், மனவடுக்கள், மனநிலைகள் தத்துவரூபமான காட்சிப் படிமங்களாக வெளிப்பட்டு பங்குபற்றுவோரிடம் ஓர் உணர்வுக் கையளிப்பு நடைபெற்று ஆற்றுப்படுத்தல் நடைபெறுகின்றது.

இவ் அனுபவக் கையளிப்பினை வரைபடத்தினூடாக இனங் காணலாம்

ஆற்றுவோன் (Performer)

ஆற்றுகை (Actor Feeling Performance) ⇅ உணர்வு / அனுபவம் / செய்தி } கையளிப்பு ⇅ ஆற்றுகை (Audience Feeling Performance)

பார்ப்போர் (Audience)

அரங்கில் மூலக்கூறுகளான கட்டிட, சிற்ப, இசை, நடன, தொழில்நுட்ப (ஒலி, ஒளி) இலக்கிய வேட உடை, ஒப்பனை, மேடைப்பொருள் உருவாக்கல் கலை, முகாமைசார் மேடை முகாமை, நெறியாள்கை, போன்ற கலைகளின் சங்கமிப்பும் தற்கால பல்பரிமாண ஆற்றுகைகளான கல்வி, பொழுதுபோக்கு, சமூகமாற்றுத்தன்மை, சுகாதார சமூக விழிப்புணர்வு, நோய் தீர்க்கும் (healing theater) அரங்காற்றுகை வடிவங்களும் நாடகத்தின் தனித்துவமான படைப்பாளி நுகர்வோர் உணர்வுக் கையளிப்புத் தன்மை, சுதந்திர வெளித்தன்மை, வெளிப்பாட்டுச் சுதந்திரம், பேச்சு, கருத்து சுதந்திரத்தன்மையை நாடக செயல் இயக்கங்கள் கொண்டிருப்பதால் மனித மனங்களில் புதைந்திருக்கும் எதிர்பார்ப்புக்கள். ஏமாற்றங்கள், மனமகிழ்ச்சிகள், மனவடுக்களை களைந்து மனித மனங்கள் இலக்கினை நோக்கி வெற்றிநடைபோட்டு நம்பிக்கை வாழ்வினைக் கட்டியெழுப்ப அரங்கின் ஆற்றுப்படல் வல்லமையை சாதனமாக்கி மக்களை ஆற்றுப்படச் செய்யலாம்.

## ஆற்றுப்படுத்தலைப் புரிதலும் அரங்காற்றுகையூடாக ஆற்றுப்படுத்தலும்

இன்று ஆற்றுப்படுத்தலானது சிறு குழந்தை முதல் முதியோர் வரை அவசியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. இன்றைய நவீன இயந்திரமயமான சூழல், யுத்தம், நபரின் அகப்புறக் காரணிகளின் தாக்கத்தினால் மனிதன் ஒவ்வொரு கணமும் மனவடுவிற்கு உட்பட்டு மனச்சஞ்சலத்திற்கு உட்படுகின்றான். சில மனிதர்கள் தனிமையில் இருந்தும், கோவிலுக்குச் சென்றும், மனதிற்கினிய இடத்திற்குச் சென்றும் தமது கருத்தை அனுசரிக்கக்கூடிய ஒத்துணர்வு மனநிலையுள்ளவருடன் கூறியும் மனச் சஞ்சலத்தைக் குறைத்தும் ஆற்றுப்பட எத்தனிக்கின்றனர். இங்குள்ள தனிமையான சூழல் மனத்திற்கினிய இடங்கள், மனரசனைக்குரிய இடங்கள், பிரச்சனைக்குப் பரிகாரம் கூறப்படல், கலைநயங்கள் தேவைநாடியின் மனவிறுக்கத்தைக் குறைக்கவோ அல்லது அதிலிருந்து விடுபடவோ துணை புரிகின்றது. நாடகச்செயல் இயக்கத்தில் மேற்கூறிய தேவை நாடியின் மன இறுக்கம் குறைப்பதற்கான சாத்தியப்பாடுகள் ஆற்றுவோர், நுகர்வோர் நேரடித் தொடர்பாடல் உணர்வுக் கையளிப்பின் மூலம் சாத்தியமாகின்றது.

தற்போதைய சூழலில் ஆற்றுப்படுத்தல் அத்தியாவசியமானது என்பதை எமது ஆற்றுப்படுத்தல் கற்கைநெறி நேரடிக் கள ஆய்வின் போது மனித மனங்களிடமிருந்து இனங்கண்டு கொண்டேன். 50 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் "இப்ப ஒண்டும் செய்யேலாது", "எல்லாம் மாறிவிட்டது" என்கிறார். 65 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் "என்னத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுறது, எல்லாம் முடிஞ்சு போட்டுது" என்கிறார், 18 வயது இளைஞர் கூறுமிடத்து, "படிப்பில் மனம் ஒன்றிக்கமுடியேலே" என்கிறார். 33 வயது; மதிக்கத்தக்க உயர் கல்வி கற்று விட்டு வேலை வாய்ப்புக்காக காத்திருக்கும் ஒருவர் கூறுமிடத்து "நாம் படித்தது வீணாய் போச்சுது எவ்வளவு காலம் பெற்றவருக்கு பாரமாய் இருக்கிறதோ தெரியலை. பணக்கஸ்ரம் ஒருபுறம், உளரீதியாக பாதிப்பிலிருந்து எப்ப மீளுவேனோ தெரியலை" என மன சஞ்சலத்துடன் கூறினார்.

60 வயதுள்ள யுத்த பாதிப்பிற்குள்ளான பெண் ஒருவர் கூறுமிடத்து. "எனக்கு இப்ப ஒண்டிலும் விருப்பம் இல்லை என்னத்தை நினைச்சாலும் அது கவலைக்குரியதாக இருக்குது. ஒண்டிலும் நம்பிக்கை இல்லை. எப்பவும் என் வாழ்வில் மனச்சஞ்சலம் தான் கவலையை மாற்ற வழியும் தெரியேலை, சோகம் தான் மிஞ்சி இருக்குது" என்கிறார்.

இன்று ஆற்றுப்படுத்தல் என்பது சமகாலத்தில் உடனடி நிவாரணியாக தேவையாக உள்ளது. தனிநபர் தனக்குத் தானான முரண்பாடுகள் இன்னொருவரிடனான முரண்பாடுகள், சமூக, கடவுள் முரண்பாடுகளுக்கு சிகிச்சை அளிக்கும் வல்லமையை அரங்கு கொண்டுள்ளது. மேலும் அரங்கின் சுதந்திரத்தன்மை, வெளிப்பாட்டுத் தன்மை, வெளிப்பாட்டுச் சுதந்திரம், உணாவு. அனுபவ, செய்தி கையளிப்புத்தன்மை, பல்கலை இணைவுத்தன்மை, கலைஞர்கள் ஒருங்கிணைந்து கூட்டுணர்வுத்தன்மை, கலைஞர், சுவைஞர் மன இறுக்கத்திலிருந்து விடுபடுவதற்கான சாத்தியத்தன்மை என்பன நாடகத்தினூடான சமூகப்படிப்பினையை வழங்கி மக்களின் மனசஞ்சலத்திற்கு வடிகாலாக அமைகின்றது.

அரங்கின் பல்பரிமாண பங்காற்றும் தன்மையான கல்வி, கலாசார, அரசியல், சமூக, சமய, சம்பிரதாய, நோய்தீர்க்கும் சிகிச்சைத்தன்மைகள், விழாவெளி அரங்காற்றுத்தன்மை, சடங்காற்றுத்தன்மை, நகைச்சுவைக் கதைகளால் ஏற்படும் healing விகட வழிகள், நாடக இயக்கத்தில் செயற்படும் நபரிடையான உடல்மொழி, சைகைகள், ஊமங்கள் (mime), குரல் வெளிப்பாடுகள் நாடக கள அழகுநிலைகள், ஒத்திசைவு, மேடைச்சமநிலைகள், நவரச உணர்வு வெளிப்பாடுகள், நடிகர்-சகநடிகர்-பார்வையாளர் ஒத்துணர்வுகள், சிகிச்சை வழியான செயல் இயக்கங்கள், குரலின் ஏற்ற இறக்கங்கள் எமது பாரம்பரியங்களின் குழையடித்தல், தண்ணீர் விசுறுதல், கடந்தகால விடயம் கூறப்பட்டு எதிர்கால விடயம் முன்மொழிதல் போன்ற அதிர்ச்சி வைத்திய செயற்பாடுகளை நாடக இயக்கங்கள் கொண்டுள்ளன.

**முடிவுரை :**

நாடக அரங்கில் மலிந்து காணப்படும் ஆற்றுப்படுத்தல் அதிசயங்களை (Healing miracles) சமூக மக்கள் உணர்ந்து நாடக அரங்க செயற்பாட்டில் பங்காற்றி மனவடுவிலிருந்து விடுபட்டு அன்பு, ஆதரவு, தன்நம்பிக்கை வாழ்வு, மன அமைதி, வழிகாட்டல், எதிர்கால இலக்கினை நோக்கி மனத்தைரியம், செயல்திறனை பெற்று உடல், உள, சமூக நன்நிலையுள்ள ஆரோக்கியமான மானிடராக வாழச்செய்வதே அரங்கியலாளர், உளவியலாளர், சமூக விழிப்புணர்வுள்ளோரின் காலத்தின் தேவை என்றால் மிகையாகாது.

**உசாத்துணை நூல்கள் :**


1. உளமார யோசப்பாலா, பக். 1, 2, 3, 6.
2. ஆற்றுப்படுத்தல் கலை – நுண்திறன் மாதிரி, தா. ஜோன் அந்தோனி.
3. எங்கே நிம்மதி? கோகிலா மகேந்திரன், 2000.
4. பண்டைத்தமிழ் சமூகத்தில் நாடகம், பேராசிரியர் சிவத்தம்பி.
5. ஜீவநதி அரங்க கட்டுரைகள், த. வசந்தன், ஜீவநதி வெளியீடு, 2011 Nov.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. ராஜ்குமார்
(துளிர்கள் நிறுவன மாணவன்.)

unicef

# சிறுவர் உரிமைகளும் கடமைகளும்

பெற்றோரின் உன்னதமான சொத்துக்கள் பிள்ளைகளாவர் பெற்றோருக்கு மாத்திரமின்றி நாட்டினது மூலவளமாக சிறுவர்கள் விளங்குகின்றனர். சமூகத்தின் எதிர்காலச் சொத்தான சிறுவர்களைப் பேணிப்பாதுகாப்பது சமூகத்திலுள்ள அனைவரதும் கடப்பாடாகும். சிறுவர் நலனில் மூத்தோர்கள் தமது பிள்ளைகளை ஊட்டிவளர்த்தல், அரவணைத்தல், தம்மைவிருத்தி செய்வதற்கான சந்தர்ப்பங்களை பெற்றுக்கொடுத்தல் வேண்டும்.

சமகாலத்தில் சிறுவர்கள் என்ற பதத்தினுள் 18 வயதிலும் குறைந்த இளைய பருவத்தினரை உள்ளடக்கலாம். சிறுவர் உரிமைகள் உடன்படிக்கைகள் தோற்றப் பின்னணியை நோக்கின் 1ம், 2ம் உலகப்போரில் எதுவித சம்பந்தமில்லாமல் இலட்சக்கணக்கான மக்கள் சித்திரவதைகளுக்கு உள்ளாதல், கொல்லப்படல், அநாதைகளாதல் விளைவின் தாக்கத்தினால் 1989ம் ஆண்டு நவம்பர் மாதம் 20ம் திகதி ஜக்கியநாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் (convention of the right of the child) தோற்றம்பெற்று யுனிசெப் (UNICEF) அமைப்பின் வழிநடத்தலால் சிறுவர் நலன் காக்காப்படுகின்றது. 1992ம் ஆண்டு முதல் இலங்கையும் இணைந்து சிறுவரின் போசனை, பாதுகாப்பு, கல்வி, வழிகாட்டல், மேம்பாட்டினைபேணி சிறுவர்களின் நலன், சிறுவர் பாதுகாப்பு ஆணைக்குழுவின் அதிகாரத்திலும் சிறுவர் பெண்கள் விவகார அமைச்சின் கீழ் சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர்கள், சிறுவர் நன்னடத்தை திணைக்களம், சிறுவர் உரிமை மேம்படுத்தல் உத்தியோகத்தர் [CRPA] சிறுவர் பாதுகாப்பு பொலிஸ்பிரிவு, அரச, அரசசார்பற்ற உள்நாட்டு வெளிநாட்டு தான்னார்வ நிறுவனங்கள் அனுசரணையுடன் பாதுகாக்கப்படுகின்றது.

## சிறுவர்களின் கடமைகள்

- பெற்றோருக்கு கட்டுப்பட்டு நடத்தல்.
- சமூகத்தில் மூத்தோர்களை மதித்தல்.
- ஆசிரியர்களுக்கு மரியாதைசெய்தல்.
- பொதுச்சொத்துக்களை பாதுகாத்துப் பராமரித்தல்.
- நல்லொழுக்கத்தை கடைப்பிடித்தல்.
- குடும்பத்தவரையும் அயலவரையும் நேசித்தல்.
- நண்பர்களுடன் ஒற்றுமையாக பழகுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பிராணிகள் உயிரினங்கள் மீது இரக்கம் காட்டுதல்.
- சமூகமுன்னேற்றத்தில் பங்கெடுத்தல்.
- சுற்றாடலை பாதுகாத்தல்.
- ஆரோக்கியமாக வாழுதல்.
- குற்றச்செயல்களில் ஈடுபடாதிருத்தல்.
- தலமைத்துவத்திற்கு கீழ்ப்படிதல்.
- மாற்றுத்திறனாளிகட்கு உதவி செய்தல்.
- சட்டங்கள், சம்பிரதாயங்களை மதித்து அவற்றை பின்பற்றல்.

## சிறுவர்களின் உரிமைகள்

- பாகுபாடு காட்டுவதிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை.
- உயிர்வாழ்வதற்கும் முன்னேறுவதற்குமான உரிமை.
- பெற்றோரிடமிருந்து பராமரிப்பையும் நலன்களையும் பெறுவதற்கான உரிமை.
- கல்வியை பெற்றுக்கொள்வதற்கான உரிமை.
- சுகந்திரமாக கருத்து வெளியிடும் உரிமை.
- வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கான உரிமை.
- பெற்றோரிடம் வாழ்வதற்கும் உறவுகளை பேணுவதற்குமான உரிமை.
- சமயகலாசார விதிமுறைகளை அனுபவிப்பதற்கான உரிமை.
- சித்திரவதை, இழிவான நடத்தையிலிருந்து பாதுகாப்புப்பெறும் உரிமை.
- விளையாட்டு, பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் பங்குபற்றும் உரிமை.
- பாலியல் துஸ்பிரயோகம், போதைப்பொருள் பாவணையிலிருந்து தம்மை பாதுகாப்பதற்கான உரிமை.

மேற்குறிப்பிட்ட கடமைகள், உரிமைகளை சிறார்களும் ஏனைய மனிதர்களும் கடைப்பிடிப்பதன் மூலம் சமூகம் ஆரோக்கியமாக அமையும்.

சிந்தனைக்கு :

"சிறுவர் உளவியல் அறிந்து
சிறுவரோடு அணுகு"
"சகமாணவரிடையே பாரபட்டம்
சிறுவர் உளநலத்தைபாதிக்கும்"




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொ. சசிகலா
(துளிர்கள் நிறுவன மாணவி)

# இன்றைய நவீன யுகத்தில் இளைஞர் யுவதிகளும் "இலங்கையின் கலாச்சாரச் சீரழிவுகளும்"

இன்றைய நவீன தொழில்நுட்பங்கள் வளர்ந்துள்ள காலகட்டத்தில் இளைஞர் யுவதிகளிடம் கலாச்சாரச் சீரழிவு ஏற்படுகின்றதா? இல்லையா? என்ற கேள்வி கேட்கப்படவே தேவையில்லை எனலாம். ஏனெனில் நம் கண் முன்னிலையிலேயே நாம் காண்கின்ற ஒன்றாகவே அது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு ஆய்வாளர்களும் ஒவ்வொரு விதமாக இந்த இளைஞர்களின் வயதெல்லையை வகுக்கின்றனர். இதில் இன்றைய சீரழிவு என்பது 13 வயதிலிருந்து 25 வயதிற்குட்பட்ட இளைஞர், யுவதிகளிடையே ஏற்படுகிறது. இது இவர்களுக்கு மிக முக்கியமான வயதெல்லையாகும். ஏனெனில் இந்த வயதிலேயே உடலபிவிருத்தி மட்டுமன்றி உள அபிவிருத்தியும் ஏற்படுகிறது. இது இவர்களுக்கு சமூகத்தில் பெரிய பாதிப்பு என்பதை விட எதிர்காலத்தில் இவர்களின் மதிப்பு, செயற்பாடு, விருப்பு, வெறுப்புகள் என்பவை தீர்மானிக்கப்படுகின்றது. இவ்வயதெல்லை



யானது இவர்களை சிறு பராயத்திலிருந்து அடுத்த ஒரு நிலைக்கு இட்டுச் செல்கிறது. இதில் இவர்களுக்கு ஒரு மிகப் பெரிய பிரச்சினை நிலவுகின்றது. இவர்கள், தங்கள் பழக்கவழக்கங்களில் சிறுவர்கள் போல இருப்பதா? இல்லை பெரியவர்கள் போல் இருப்பதா? என்பதே இவர்களது குழப்பம். இதனால் இவர்கள் குழம்பிப்போகும் நேரத்தில் வழிகாட்டல் தேவையாகின்றது. இவர்களது உள ரீதியான மாறுதல்கள் பெரும்பலும் கோபம், மற்றும் அழுகை, சோர்வு, தனிமை, குற்ற உணர்வு என்பவை அதிகமாகும். இம் மாறுதல்களால் இவர்களின் தகுதி என்ன என்பதை அறிவதற்கு இவர்களுக்கு ஒரு வழிகாட்டல் தேவைப்படுகிறது. அது அவர்களின் பெற்றோர், அல்லது ஆசிரியர்கள். சிறந்த உள ஆற்றுப்படுத்துனர்களாகவோ இருக்கலாம்.

இந்த வயதினர்கள் பெரும்பாலும் தங்கள் குழுவினர்களிடையே பிரச்சினைகளை உருவாக்குபவர்களாகவே மாறி விடுகின்றனர். இவர்கள் தங்கள் சுதந்திரத்தை பெரிதும் விரும்புவர். இவ்வயது மிகவும் பிரச்சினையான ஒரு வயதாகும் ஏனெனில் இவர்களுக்கு தங்கள் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பெற்றோர்களோ ஏனையோர்களோ இருக்கமாட்டார்கள். தங்கள் பிரச்சினைகளை தாமே தீர்க்கவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களாகவே அநேகமானோர் காணப்படுவர். பல முடிவுகளும் இவர்கள் எதிர்பார்த்தது போல எல்லா சந்தர்ப்பங்களிலும் அமையாது. இவர்கள் தங்கள் அடையாளங்களை தேடுகின்ற ஒரு பருவமாக இருக்கின்றது. தான் யார்? தன்னுடைய சமுதாயப் பங்கு என்ன? என்னால் ஒரு தந்தைஃதாய் ஃ கணவன் ஃ மனைவியாக வர முடியுமா? இந்தத் தேடுதல்களினால் இவர்களது பழக்கங்கள் பல்வேறு திசைகளில் செல்லலாம். இவர்கள் தங்கள் அடையாளத்திற்காக கார், உடுப்புகள் போன்றவற்றை மட்டுமல்ல சில தீய பழக்கவழக்கங்களையும் பழகக்கூடும். ஒரு இளைஞன் அல்லது யுவதியை ஒரு பெரியவர்

உளநலமுடன் நாம்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டினால் இவ் இளைஞன் அல்லது ய்வதி அவரைப் போலவே தன் பழக்கங்களை மற்றிக்கொள்ளும் தன்மை காணப்படும். ஆனால் அதை அன்போடு சொன்னால் மட்டுமே அவர்கள் செவிமடுப்பர். இவர்கள் தங்கள் நடை, உடை, பாவனைகளை பெரியவர்கள் போலவே மற்றிக் கொள்வர். இதனால் இவர்கள் பல தீய பழக்கவழக்கங்களை பழக அதிகமான வய்ப்புக்களும் கிடைக்கின்றது. இவர்களின் குணங்களைப் பற்றிப் பார்த்தோம். இனி இதனை சரியான வழிகளில் பயன்படுத்துவதற்கு தடையாக அமைவன பற்றிப் பார்ப்போம்.

ஒரு காலகட்டத்தில் பெரியோர்களின் அரவணைப்பின் கீழே பிள்ளைக்ள் வழ்ந்தனர். அக்காலகட்டத்தில் நம்மிடையே பரம்பரையான சமய, சமூக, கலாச்சாரங்கள் பின்பற்றப்பட்டன. இவை இன்று பின்பற்றப்படாமைக்கு முக்கிய காரணமாக அமைவது குடும்ப விரிசலாகும். அதாவது நம் இளைஞர்களின் கலாசார மற்றும் சமூக சீரழிவுக்கு காரணம் குடும்பங்களிடையே ஏற்பட்ட ஒரு சில விரிசல்களே. அதாவது நமது கூட்டுக் குடும்ப நிலை மாறுபட்டு எல்லோருமே வேலைவாய்ப்பு மற்றும் கல்விக்காக நகரங்களுக்கு தனித்தனியே வந்து விடுகின்றனர். அத்துடன் வீட்டில் தங்கள் பிள்ளைகளைக் கூட கவனிக்க நேரமில்லாது தாய், தந்தை இருவருமே வேலைக்குச் செல்கின்ற ஒரு சமூகம் உருவாகிவிட்டது. இதனால் பிள்ளைகளுக்கு போதிய அளவு வழிகாட்டல்கள் மட்டுமல்லாது அன்பு,பாசம் என்பவையும் கிடைக்காமல் போகின்றது. சில இடங்களில் அன்பு என்ற போர்வையிலே இளைஞர்கள் கேட்கின்ற அளவுக்கு பணம் மட்டும் அவர்களின் கைகளில் இருக்கின்றன. இது இளைஞர்களை எந்தப் பாதைக்கும் இட்டுச் செல்லலாம். இது மட்டுமல்லஅடுத்து இவ் உலகில் நவீன தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள். இது ஒரு பெரிய நெருக்கீடு. அதாவது பெற்றோருக்கும்,பிள்ளைகளுக்கும் இடையே விரிசலை ஏற்படுத்தும் ஒன்றாக கைத்தொலைபேசிகளும் இணைய வசதிகளும் அமைந்து விடுகின்றன. இதைப்பற்றிய போதிய வழிகாட்டலைக் கொடுக்க பெற்றோருக்கு போதிய நேரமும் அறிவும் இருப்பதில்லை. இது இளம் சமூகத்தை எங்கோ கொண்டு செல்கிறது. வேலைக்கு செல்லும் பெற்றோர்களின் போதிய அன்பின்மையால் ஏங்குகின்ற இளம் வயதினர் அன்பென்ற போர்வையில் போலிவேடம் போடுகின்ற எதிர்பாலரின் தொலைபேசி அழைப்பிற்காக காத்திருக்கின்றனர். பெற்று, வளர்த்து, ஆளாக்கிய பெற்றோரை விடுத்து இடையில் வந்த எதிர்பாலரின் கனிவான வார்த்தையில் மயங்கி தம்மையே தாம் இழக்கின்ற நிலைக்குக் கூட ஆளாகுகின்றனர். அறிந்தோ அறியாமலோ இவர்கள் விடுகின்ற தவறானது வாழ்நாள் முழுவதும் குற்ற உணர்வை உண்டாக்குவதுடன் வாழ்வே கேள்விக்குறியாக மாறவும் வய்ப்புண்டு. சமூகத்திலுள்ள சிலரின் செயற்பாடுகளே தீயனவாகக் காணப்படுகின்றது.

மேலும் இவ் இளைஞர்கள் சிலர் தங்கள் அடையாளங்களை சமூகத்திற்கு எடுத்துக்காட்டுவது எந்த வகையில் என்பது புரியாதவர்களாக சில தீய நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றனர். அதாவது இவர்கள் வீதிகளிலும், மரங்களுக்கு கீழேயும் குழுக்களாக கூடுதல், பெரும்பாலான இளைஞர்கள் தங்கள் கல்வி நிலையங்களுக்கும், பாடசாலைகளுக்கும் செல்வதாகக் கூறி வேறு இடங்களில் வீதிகளில் நின்று பெண்களை வம்பிழுக்கின்றனர் இது இவர்கள் தங்களின் சமூக அடையாளம் அதாவது தம்மைக்கண்டால் அனைவரும் பயப்படவேண்டும் என்பதும் இவர்களது நடவடிக்கையாக இருக்கின்றது. சிலர் தாங்கள் பெரியவர்கள் என்ற நினைவிலும், மற்றும் சில தீயோர்களின் வழிகாட்டலினாலும் புகைப்பிடித்தல், மது அருந்துதல் போன்ற சீர்கேடுகளுக்கும் ஆளாகின்றனர். அதாவது ஒரு சிலர் அது எப்படி இருக்கும்? அதைக் குடிப்பதனால் என்ன நடக்கும்? போன்ற ஆசைகளினாலும் அச்செயலுக்கு அடிமையாகின்றனர். இன்னும் சிலரை வாழ்கின்ற சூழலும் புகை, மதுவிற்கு அடிமையாக்குகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்களின் வற்புறுத்தலால் நாடுபவர்களும் உளர். இதனால் சிலர் நேரடியாக இதற்காகவே அர்ப்பணித்துவிடுகின்றனர். இவர்களின் எதிர்காலமும் கேள்விக்குறியாகின்றது இந்தநிலை பெரும்பலும் சூழ்நிலை, சந்தர்ப்பங்களினாலே ஏற்படுகின்றது. இது மட்டுமல்ல இளைஞர் களிடையே காதல் என்ற போர்வையிலே ஆடப்படுகின்ற நாடகம் எத்தகைய ஒரு பெரிய விளைவை ஏற்படுத்துகின்றது என்பதை நாம் எண்ணிப்பார்க்கத் தவறுகின்றோம். இதனால் இளைஞர்கள் பேசும் ஆசை வார்த்தைகளில் மயங்கி வயிற்றில் குழந்தைகளைக் கூட சுமக்கின்ற அளவுக்கும் நம் கலாச்சாரம் மாறிக்கொண்டே செல்கிறது. பிள்ளைத்திருமணத்தை எதிர்த்த ஒரு காலம் இருந்தது. ஆனால் இன்று இளைஞர், யுவதிகளிடையே குறைந்த வயதிலேயே திருமணம் வழக்கமாகிப் போயுள்ளது.

இன்றைய இளைஞர், யுவதிகளின் திருமணங்கள் பல பெற்றோருக்குத் தெரியாமலேயே நடந்து விடுகின்றன. இதனால் ஏற்படும் பின்விளைவுகளைப் பற்றி இவர்கள் சிந்திப்பதே இல்லை. இன்னும் சிலர் திருமணமேயின்றி கருத்தரிப்பதையும் எமது நாட்டில் அறிய முடிகிறது. பிறந்த குழந்தைக்கு தந்தையை இனங்காட்ட முடியாத நிலைமையில் தன்னோடு சேர்த்துக் குழந்தையையும் நிர்க்கதியாக்கும் நிலைமையும் காணப்படுகிறது. எமது சமூகத்திலே என்பதை பத்திரிகைகளில் கூட அறிய முடிகிறது. இவை மட்டுமல்ல இன்னும் சிலர் காதல் திருமணம் என்ற போர்வையில் தங்கள் காம வெறிகளை தீர்த்துவிட்டு பெண்களை நிர்க்கதியாக்கிவிட்டு செல்கின்ற சிலர் உருவாகியிருக்கின்ற சமூகமாக காணப்படுகின்றது. அதே வேளையில் மேலும் பல அதாவது தனிமையில் பெண்கள் செல்வதும், வீடுகளில் தங்குவதும் மிகப் பிரச்சினையான ஒன்றாக உருவெடுத்துள்ளது. இன்றைய நவீன உலகில் விபச்சாரம் என்ற ஒன்றும் விரிவடைந்து வருகின்றது. இதற்கு இன்றைய யுவதிகள் மற்றும் இளைஞர்களே பொறுப்பேற்க வேண்டும் ஏனெனில் அவர்கள் சிலராலேயே இது வளர்கிறது. இதன் தீர்வுதான் என்ன? அதனால் இவ்வாறான பாரிய நோய்கள் ஏற்படுகின்றன எச்.ஐ.வி போன்ற நோய்த்தொற்றுக்கள் நம் நாட்டில் ஏற்பட யார் காரணம்......?

இன்றைய சமூகத்தில் மாணவர்கள் ஆசிரியர்களை பழிவாங்குகின்ற நிலைமையும் காணப்படுகிறது. ஒரு காலத்தில் ஆசிரியர் என்றாலே தெய்வம் என்று மதிக்கப்பட்டது. ஆனால் இன்று அவ் ஆசிரியர்களே கொலை செய்யப்படுகின்றனர். அது மட்டுமல்ல சில இடங்களில் ஒரு சில ஆசிரியர்களே மணவர்களைத் தவறான பாதைக்கு இட்டுச் செல்வதும் நடைபெறுகின்றது. மேலும் பல இளைஞர்கள்,யுவதிகள் திருமணங்களின் பின்னர் விவாகரத்துக்களை மேற்கொள்கின்றனர். கடந்தகாலத்தில் திருமணம் என்பது புனிதமாக போற்றப்பட்ட போதிலும் இன்று நம்மிடையே விவாகரத்துக்கள் பல்கிப்பெருகியிருக்கின்றது. இதற்கு இளைஞர், யுவதிகளிடையே குறைந்து வரும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் காரணமாகின்றது. கணவன், மனைவிக்கிடையே புரிந்துணர்வும், ஒருவரை ஒருவர் விட்டுக்கொடுத்து, பிரச்சினைகளை ஆற்றுப்படுத்தக் கூடியவர்களாகவும் காணப்பட்டாலே விவாகரத்தை கூடிய வீதம் தவிர்க்க முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இளைஞர்களின் அபிவிருத்தியில் ஏற்படும் சில பிரச்சினைகள்**

இளைஞர்கள் தமது உடலில் ஏற்படுகின்ற மாற்றங்களை ஏற்றுக்கொள்வதிலேயே பல இடர்பாடுகளை சந்திக்கின்றனர். இதை சிலர் மிக மகிழ்ச்சியுடன் எதிர்கொள்கின்றனர். இன்னும் சிலர் சோர்வடைகின்றனர். இதனை அவர்கள் ஒப்புக்கொள்வதற்கு அதன் வளர்ச்சி முறைகள் பற்றிய விளக்கம் தேவைப்படுகிறது. இவ்விளைஞர்கள் சிறுபராயம் வரை தங்கள் குழுவில் ஆண்,பெண் பாகுபாடின்றிப் பழகுவர். கொஞ்சம் வளர்ந்த பின் ஒருதலை நட்பு அதாவது ஆண்கள் ஆண்களுடனும்,பெண்கள் பெண்களுடனும் நட்புக் கொள்வர் இவர்களுக்கு இந்த இளைஞர் பராயத்திலேயே யாருடன் எப்படிப் பழக வேண்டும் என்ற வழிகாட்டல் தேவைப்படுகிறது.

இந்நிலையிலே ஆண்,பெண்கள் தாங்களே தங்கள் பாலினங்களை ஒப்புக் கொள்ளும் நிலையும், இன்னும் சிலரின் பிள்ளைப் பராய குணங்கள் சில நிறுத்தப்பட்டு இவர்கள் வளர்ந்தவர்களாகவும் சமூகத்திற்கு எடுத்துக்காட்டப்படுகின்றனர். இதற்கும் அவர்கள் இக்காலகட்டத்திலேயே தயார்ப்படுத்தப்படுகின்றனர். இவர்கள் சிறுபராயத்தில் பெற்றோராலேயே வளர்க்கப்படுகின்றனர். அதனால் பிள்ளை பெற்றோரை சார்ந்து வாழ்கிறது. பின்னர் இளைஞர் ஆகும் போது தன்னிச்சையாக செயற்பட முயலுகையில் இவர்களுக்கு வழிகாட்டல் தேவைப்படுகிறது.

- பொருளாதார ரீதியில் இளைஞர்கள் சுதந்திரமாகும் போதும் அதற்கான சிறந்த வழிகாட்டலும் இவர்களுக்குத்தேவைப்படுகிறது.
- அவர்தம் தொழிலைத் தெரிவு செய்வதில் கூட அவருக்கு சிறந்த வழிகாட்டலும் எதிர்காலம் பற்றிய ஒரு அறிவுரையும் தேவையாகின்றது.
- இளைஞர்களுக்கு திருமணம் பற்றிய உடல், சமூக, உள மற்றும் கலாசார ரீதியான விளக்கங்களும், போதியளவு நேர்மறையான விளக்கங்கள் தேவையாகின்றது.
- ஒரு தனி மனிதனாக சமூகத்திற்குள் செல்லும் போது அவருக்காக உரிமைகள் மற்றும் கடமைகள் மற்றும் மற்றவர்களுக்காக தன் சந்தோசங்களை தியாகம் செய்தல் போன்றவை தேவையாகின்றது.
- சமூக ரீதியாக இவர்களுடைய பொறுப்புக்களும், பழக்கவழக்கங்களும் மற்றும் சமூகத்திற்குள் உள்வாங்கப்படுவதற்கும் நன்னடத்தைகளும் முக்கியமாகின்றது.
- சில புராணகால வழிவழியான கலாச்சாரங்களும் இவர்களுக்கு மிகச்சிறந்த வகையில் போதிக்கப்பட வேண்டும்.

இந்த வழிகாட்டல்கள் இளம்பராயத்தினருக்கு சிறந்த முறையில் கிடைக்கவில்லையோ அவர் தன்னை மட்டுமல்லாது நம் சமூக,சமய கலாச்சாரங்களையும் சீரழிக்கிறார் என்பதே உண்மை.

சுய குறிக்கோள் என்பத இந்நிலையிலேயே வளர்கின்றது. அதாவது இதில் 6வகை
ஒரு இளைஞன் அல்லது யுவதி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அவர்களுடைய உண்மையான குறிக்கோள்
- அவன் / அவள் தன் நினைக்கும் குறிக்கோள்
- அவன் / அவள் தான் இப்படியாக வேண்டும் என்று மற்றவர்கள் நினைக்கும் குறிக்கோள்
- அவர்களுக்கு தாங்கள் என்னவாக வேண்டும் என்ற விருப்பு
- மற்றவர்களுக்கு அவர்கள் என்னவாக வேண்டும் என்றவிருப்பு

இச் சுய குறிக்கோளின் போது சரியான வழிகாட்டுதல் இல்லாத ஒரு இளைஞனோ, யுவதியோ தங்களது சுய மதிப்பை இழக்கின்றனர் இதனால் இவர்கள் சமூகத்தை எதிர்கொள்ள கஷ்ரப்படுகின்றனர். இளைஞர்களுக்கு சமூகத்தை எதிர்கொள்வதற்கு வழிகாட்டல் தேவைப்படுகின்ற இக் காலகட்டத்தில் நவீன தொழில்நுட்பத் தொடர்பு சாதனங்கள் அவனை இன்னும் தவறான பாதைக்கே இட்டுச் செல்கின்றது.

**யுனிசெப்பின் ஆய்வின்படி...............**

- இலங்கையில் 1/5 பகுதியினர் இளைஞர்கள்

- *29911 பள்ளிசெல்லும் இளைஞர்களில்....*
    - 28% எதிர்கலக் குறிக்கோள் இல்லை
    - 36% இளம்பராயத்தினருக்கு எப்போதும் உள்ள வைத்தியர், எஞ்சினியர் போன்றவையே காணப்படுகிறது.
    - 25% தங்கள் குறிக்கோள்களை தங்கள் திறமையுடன் ஒப்பிட்டு தேர்வு 67% செய்கின்றனர்.
    - தாங்கள் செய்ய முடியாத ஒன்றை செய்ய ஆசைப்படுகின்றனர்
    - 24% தங்கள் குறிக்கோள்களில் சரியாகச் செல்கின்றனர்

- *10079 பள்ளியை முடித்த இளைஞர்களில்...*
    - 72% வேலை தேடுகின்றனர்
    - 18% தங்கள் குறிக்கோள்களை அடைந்துள்ளனர்


இன்றைய விஞ்ஞான யுகத்தில் மனிதன் விந்தைகள் பலவற்றை புரிந்து கணணி யுகத்தில் கால்பதித்து விட்டான். பெறுதற்கரிய பேறுகளை பெற்ற மனிதன் மனிதனாக சமூகத்தில் நற் பிரஜையாக வாழ வேண்டுமெனில் மனதை ஆற்றுப்படுத்தக் கூடியவனாக திகழ வேண்டும் தனக்கும் சமூகத்திற்கும் நல்லதை செய்து தீயவற்றை விலக்கி ஒவ்வொருவரும் நடந்தால் சமூக சீரழிவை குறைக்கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ர. மாலினி
(துளிர்கள் நிறுவன மாணவி)

# குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிசெய்யுங்கள்...



18 வயதிக்குட்பட்ட ஒவ்வொருவரும் பிள்ளையாவர்.

சிறுவர் பாதுகாப்புபற்றி சம்வாயம் சர்வதேசவாரியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். உலகின் அநேகமாக எல்லா நாடுகளும் இதன் அடிப்படையிலேயே பிள்ளைகள் நடத்தப்படுவர் என ஏற்றுக் கொண்டுள்ளனர்.

**சிறுவர் பாதுகாப்பு உரிமைகள் சில...**

18 வயதிக்குட்பட்ட ஒவ்வொருவரும் பிள்ளையாவர்.

சிறுவர் பாதுகாப்புபற்றிசமவாயம் சர்வதேசவாரியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். உலகின் அநேகமாக எல்லா நாடுகளும் இதன் அடிப்படையிலேயே பிள்ளைகள் நடத்தப்படுவர் என ஏற்றுக்கொண்டுள்ளனர்.

**சிறுவர் பாதுகாப்பு உரிமைகள் சில...**

- எல்லா பிள்ளைக்கும் அவர்களின் வயது, பால், இனம், நிறம் சாதி, மொழி அல்லது மதம் எவ்வாறு இருப்பினும் இந்த உரிமைகள் ஏற்புடையதாகும்.

- பிள்ளைகள் தொடர்பான சகல செயற்பாடுகளும் முடிவுகளும் அவர்களின் சிறந்த நலன்களைக் கருத்திற் கொண்டே மேற்கொள்ளுதல் வேண்டும்.

- பிள்ளையின் பரிணாம வளர்ச்சி திறனுக்கு ஏற்றவாறன நெறிமுறைகளைப் புகட்டுவதில் பெற்றோருக்கும் குடும்பத்தினருக்கும் முழுப்பங்கு உண்டு.

- எல்லா பிள்ளைகளையும் சித்திரவதை, குரூரதண்டனை, ஆயுட் சிறைத் தண்டனை, மரணதண்டனை சட்டவிரோதமான கைது அல்லது சுதந்திர மறுப்பு ஆகியவற்றுக்கு உள்ளடக்கப்படலாது. தகுந்த சிகிச்சை, தடுப்பு காவலிலுள்ளவளந்தோரிடமிருந்து விலகி வைக்கப்படல் குடும்பத்தவர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ளல்.

- போர் காலங்களில் பாதுகாப்புப் பெறும் உரிமைபிள்ளைகளுக்குஉண்டு 15 வயதுக்கு குறைந்த எந்த பிள்ளையும் போராட்டங்களில் நேரடியாக ஈடுபடவோ ஆயுதபிணக்குகளில் சேர்க்கப்படவோ கூடாது. அரசாங்கம் ஆயுதப் பிணக்கினால் பாதிக்கப்பட்ட எல்லாப் பிள்ளைகளுக்கும் கராமரிப்பும் பாதுகாப்பும் வழங்குதல் வேண்டும்.

- பிள்ளைகளை அவர்களின் சிறந்த நலனை முன்னிட்டு அல்லாமல் (புறகக்கணிப்பு, துஷ்பிரயோகம்) மற்றும்படி பெற்றோரிடமிருந்து பிரித்தல் ஆகாது

- பெற்றோரில் ஒருவரால் அல்லதுவேறொருவரால் பிள்ளை கடத்தப்படுதலை அல்லது பலாத்காரமாக வெளிநாட்டில் தடுத்து வைக்கப்படுதலை அரசு தடுக்க முயல்வதுடன் அவர்களை மீட்பதற்கும் உதவுதல் அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தம் குடும்பங்களுடன் வாழமுடியாத பிள்ளைகளுக்கு விசேடபாதுகாப்பு அவசியம் பிள்ளையின் பண்பாட்டுப் பிண்ணனிக்கு உகந்தமாற்றுக் குடும்ப பராமரிப்பை ஏற்பாடு செய்தல் அல்லது தாபரிப்பு வழங்கும் விடுதியில் தங்கவைத்தல் அரசாங்கத்தின் கடப்பாடகும்.

- ஒரு பிள்ளை பாதுகாப்பு இல்லை என்னும் காரணத்தினால் தன் வீட்டை அல்லது நாட்டை பிரிந்து அகதியானால் அப் பிள்ளை விசேட பாதுகாப்பும் ஆதரவும் பெறும் உரிமைஉண்டு.

மேலும் குழந்தைப் பருவத்தின் இக் காலத்தில் தான் குழந்தையின் வளர்ச்சிச் செயல் முறைகள் மிகுந்த பங்கு வகிக்கின்றன. எனவே குழந்தை உளவியலில் நுண்ணறிவு மனவெழுச்சி, மனப்பான்மை, சமூகம் போன்ற பிறபல்வேறு வளர்ச்சிச் செயல் முறையில் மரபுநிலை, சூழ்நிலைக் காரணிகள் எல்லாம் குழந்தை உளவியலாலர்களால் விரிவாக ஆராயப்பட்டு விளக்கப்படுகின்றன.

சிறுவர்கள் தாங்கள்எந்த சூழலில் வளர்கின்றார்களோ அதே விதமானபழக்க வழக்கங்களுக்க பழகிகொள்ள கற்றுக்கொள்கிள்றார்கள். எல்லாசிறார்களுக்கும் அன்பு, கவனிப்பு, அரவணைப்பும் கிடைப்பதில்லைபெற்றோர் தங்களின் வேலைப் பழு, வறுமை, தெளிவான மனநிலை இன்மை போன்ற காரணங்களினால் பின்னடைகின்றார்கள் இருப்பினும் பெற்றோர்தங்கள் பிள்ளையின் நலனிலும் உடல், உளவிடயங்களிலும் பாதுகாப்பு போன்ற விடயங்களை உறுதிப்படுத்தல் மிகஅவசியம். ஏனெனில் பாடசாலையிலோ, பிரத்தியோக வகுப்புகளிலோ, அல்லது வீட்டிலோ பிள்ளைகள் எவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகின்றார்கள் என்பதை பல பெற்றோருக்குத் தெரிவதில்லை. பெற்றோர் பிள்ளைகளிடம் சகஜமாக அணுகுவது மிக அரிதாக உள்ளதே... மேலும் சில பெற்றோர்களின் கடுமையான தண்டனை இவற்றுக்குப் பயந்த பிள்ளைதான் துன்பப் படுத்தப்பட்டாலும் ஏதோதானே தவறுசெய்து விட்டதாக எண்ணி மறைத்து விடுகின்றனர்.

பெற்றோர், பெறியவர்கள் பிள்ளையின் பாதுகாப்பை உறுதிப்படுத்த உதவுதல் வேண்டும். உதாரணமாக

- பிறர்உமக்கு விருப்பான முறையில் உடலைதொடலாம் (நண்பர்கள் உங்கள் கைகளைப் பற்றிக்கொள்ளுதல்)
- உங்கள் விருப்பத்திற்குமாறாகதெரிந்தவரோ,வயதிற்கு மூத்ததவரோஉங்கள் உடலைதொடுவதைஅனுமதிக்க கூடாது.
- நீங்கள் தனிமையில் உள்ளபோதுபரிசுப் பொருட்களை தந்து உங்களை வருடினாலோ அல்லது தன்னை வருடும் படிவற்புருத்தினால் உடனே ஆட்கள் நடமாட்டமுள்ள இடத்திற்கு விரைந்து விடுங்கள், முடியாவிட்டால் சத்தமிடுங்கள் பின்னர் பெரியவர் யாரிடமாவது சொல்லுங்கள்.

ஒவ்வொரு பிள்ளையும் கல்வி கற்று அதன் ஆளுமை, திறன்கள், உடல் மற்றும் உளரீதியான ஆற்றல்கள் என்பன முற்றுமுழுதாய விருத்தியடையச் செய்தலாகும் சுதந்திரமான சமுதாயத்திலே அடிப்படை மனித உரிமைகளுக்கும் தம் சொந்தகலாச்சார, தேசிய விழுமியங்களுக்கு மட்டும் அல்லாமல் மற்றவர்களின் விழுமியங்களுக்கும் மதிப்பளித்து பொறுப்புடனும் சமாதானமாகவும் வாழ்வதற்கு சிறுவர்களுக்கு பாதுகாப்பளிபோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி. சரண்யா
(துளிர்கள் நிறுவன மாணவி)

# அதிகரித்து வரும் தற்கொலைகளும் அவை ஏற்படுத்தும் தாக்கங்களும் தீர்வுகளும்

சாதாரண வாழ்வியல் நீரோட்டத்தில் ஈடுபட்டு இருக்கும் ஒரு மனிதனது வாழ்வில் நெருக்கீடுகள் குறுக்கிடும் போது தான் அவனது ஆளுமையின் தன்மை செல்வாக்குச் செலுத்துகின்றது. தனி மனித ஆளுமையை பாதிக்கின்ற அல்லது முடிவெடுக்கும் திறனைச் சிதைக்கின்ற நெருக்கீடுகள் பல வகை தாக்கவீதத்தை பொறுத்து நெருக்கீடுகள் வேறுபடும். இந்த நெருக்கீடுகள சிலரது வாழ்வில் ஆளுமைச் சிதைவை ஏற்படுத்தி முடிவெடுக்கும் திறனைப் பாதித்துத் தற்கொலையைத்தூண்டுகின்றன. தற்போது எமது சமூகத்தில் இடம் பெற்று வருகின்ற தற்கொலை சம்பவங்கள் பொதுவாக உள நெருக்கீடுகளாலேயே இடம் பெறுகின்றமையை அறிக்கைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. எல்லோரது மன ஆளுமைகளும் வெவ்வாறாக இருப்பதால் ஒருவருக்கு சாதாரணமான நிலையில் இருக்கும் ஒரு நெருக்கீடானது இன்னொருவருக்கு உளவியல் ரீதியில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது.இங்கு தான் உளதாக்குதிறன் என்ற எண்ணக்கருவின் உண்மை உணர்வதற்கு உரியது.



உளதாக்கு திறன் எவ்வருவருக்கும் வித்தியாசமானதாக இருக்கும். ஒருவர் சிறு இழப்பை தாங்கமாட்டது துவண்டு போகினறார் என்றால்அவரது உள தாக்கு திறன் என்பதுகுறைவாகவே காணப்படும். எனவே நெருக்கீடுகளின் தன்மை தாக்க வீதம் என்பன ஒருவரின் தற்கொலை முயற்சியை தீர்மானிக்கின்றன என்றால் அது மிகையாகாது. ஒருவா தற்கொலை முயல்கிறார் எனின் அவரின் ஆழ்மனதில் ஆர்த்து எழுகின்ற எதிர்மறை எண்ணங்கள் அவரது முடிவெடுக்கும் திறனை பாதிக்கின்றன.

இன்பமும் துன்பமும் கலந்தது தான் வாழ்க்கை சிலரின் வாழ்க்கை இன்பமாகவே நகர்ந்து செல்கின்றது சிலரின் வாழ்கையோ வறுமையும் துன்பமுமாகவே வாழ்கையை சுட்டெரிக்கின்றது இவற்றுக்கு முகம் கொடுக்க முடியாது மக்கள் தினமும் அல்லலுறுகின்றனர். வெளி உலகில் வீராப்பு பேசும் எத்தனையோ நபர்கள்தன் சொந்த வாழ்வில் ஒருபிரச்சினை வந்து விட்டால் உள்ளம் உடைந்து கதறி கண்ணீர் சிந்தி என்னால் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்று எண்ணித் தன்னுயிரை மாய்த்து கொள்ளும் செயலை செய்கின்றனர்.

தற்கொலைபற்றிய சமூகவியல் ரீதியான பார்வை எவ்வாறு இருக்கும் என்று பார்ப்போமானால் தற்கொலையானது மனித குலத்திற்கும் மனித வர்க்கத்திறக்கும் எதிரானது என்ற எண்ணப்பாடே சீர்திருத்த அடிப்படையில் சமூகவியலாளர்களாலும் உளவியளாலர்களாலும் வலியுறுத்தபட்டு வந்துள்ளன.தமிழ் சமூகத்தை பொறுத்தவரையில் மதரீதியாகவும் சம்பிரதாயரீதியாகவும் ஆரம்ப காலத்தில் எழுந்த இலக்கியங்களின் ஆதாரங்களை வைத்து நோக்கும் போது மானத்தின் பெயராலும் வீரத்தின் பெயராலும் மற்றும் கணவன் இறந்தபின் மனைவி உடன் கட்டை ஏறுதல் பாசத்தின் பெயராலும்

உளநலமுடன் நாம்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்த்தப்பட்டன. என தமிழ் இலக்கியங்கள் ஊடாக அறிகின்றோம். சங்க காலம் சங்கமருவிய காலம்(கி.பி-1-6)ம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில்மேற் கூறப்பட்ட காரணங்களுக்காக தற்கொலை நிகழ்ந்தது மானத்தின் பெயரால் தற்கொலை நிகழ்ந்ததற்குதிருக்குறளில் உள்ள

"மயிர் நீப்பின் வாழக்கவரிமான் அன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின்"

எனும் குறள் அக்காலத்தில் தற்கொலைக்கு அனுமதிக்கப்பட்டதைக் கூறுகிறது. அது மட்டுமன்றி நாட்டுக்காக உயிர் தியாகம் செய்வதை புனித கடமை எனக்கூறி அவ்வாறு இறப்பவர்களைகாவல் தெய்வமாக சித்தரிக்கப்பட்டதையும் அறியமுடிகின்றது. மேற்குறிப்பிட்ட கருத்து நிலைகளைக் கொண்டு உளவியலாளர்கள் தற்கொலை பற்றிய எண்ணகருவினை நான்கு முறைகளில் வகைப்படுத்தியுள்ளனர்.

1. அக நிலைக்குட்பட்டது.
2. உன்னதமானது.
3. விதி வசப்பட்டது.
4. பாரியமாற்றத்தில் ஒவ்வா நிலை.

இன்று மாற்றங்களால் ஒவ்வாநிலை காரணமாகவே தற்கொலைகள் அதிகளவு இடம் பெறுகின்றன.மனவடுப்பிரச்சினைகளானவை பயங்கரஅனுபங்களின்று ஆழமான பாதிப்புக்களின் விளைவால் தோற்ற மெடுப்பவை இப்பாதிப்புக்கள் இயற்கையானதாக அல்லது மனிதனால் உருவாக்கப்பட்டவையாககவே இருக்க முடியும். இயற்கை ரீதியான காரணிகள் என்ற வகையில் சுனாமி, வெள்ளப்பெருக்கு முதலிய அனர்த்தங்களால் உயிர், உடமை, அழிவு ஏற்பட்டு அவற்றில் இருந்து மீளமுடியாது திண்டாடுதல் என்பன இயற்கை ரீதியான நெருக்கீட்டுக் காரணிகளாகும். அடுத்து மனிதனால் உருவாக்கப்பட்டவை என்ற ரீதியில் போர்ச்சூழல் அதனோடு இணைந்த இடப்பெயர்வு வன்செயல்கள் உயிர், உடமை இழப்புக்கள் நாகரீக வளர்ச்சியால் ஏற்படும் கலாசார சீரழிவுகள் இதனால் ஏற்படும் வேண்டத்தகாத கர்ப்பங்கள், சித்திரவதை, நீண்டகால சிறை வாழ்க்கை, அன்புக்குரியவர்களின் இழப்புக்கள் என்பவற்றால் மனம் விரக்தியடைந்து தற்கொலை செய்கின்றனர்.

மன அழுத்தங்கள், மனசிதைவு, உளவியல்நோய்கள், கலாசார அழுத்தங்கள், காதல்தோல்வி, வறுமை,கடன்,தாங்கிக்கொள்ளமுடியாத வலி போன்ற காரணிகளால் இன்று அதிகமானோர் தமது உயிரை மாய்ப்பதை அறியக்கூடியதாக உள்ளது. பொதுமக்கள் வாழ்வில் ஏற்படும் இயல்புவாழ்வில் ஏற்படும் நெருக்கீடுகளால் உளரீதியான தாக்கத்திற்கு உள்ளாக தற்கொலை செய்யும் உணர்வு தூண்டப்பட்டு உயிர் இழப்புக்கு காரணமாக அமைகின்றது. பிரச்சினைகளுக்கு தீர்வு தற்கொலைதான் என்றால் இன்று உலகில் ஒருவரும் உயிர் வாழ முடியாது ஒவ்வருவர் வாழ்விலும் ஏதாவது ஒரு பிரச்சினை இருந்து கொண்டுதான் இருக்கிறது. ஏழைக்குப்பணப்பிரச்சினை, பணக்காரனுக்கு உடல் நலப்பிரச்சினை , சிலருக்கு பிள்ளை இல்லையே என்ற பிரச்சினை சிலருக்கு பிள்ளைகளால் பிரச்சினை என்று மனித வாழ்வில் மனித வாழ்வில் கஷ்டங்களும் துன்பங்களும் தொடர்கின்றன.

ஏக்கங்களையும் ஆசைகளையும் மனதில் வைத்துக்கொண்டு புன்னகை சிந்தும் மனிதர்கள் எத்தனையோபேர் இருக்கின்றார்கள்.உலகமுழுவதும் பிரச்சினைகள் இருந்து கொண்டு தான் இருக்கின்றார்கள் இருக்கின்றன பிரச்சினைகள் விரும்பினால் வருவதோ விரட்டினால் ஓடிவிடவோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதில்லை அவற்றிற்கு முகம் கொடுக்க நாம் துணிய வேண்டும். உலகில் யாருக்கும் வராத தர்மசங்கடம் தனது வாழ்கையில் வந்து விட்டது என்று மனமுடைந்து தான் இந்த முடிவை எடுக்கின்றனர். ஏன் இந்த கோழைத்தனம்?. உயிரை மாய்தால் பிரச்சினைக்கு தீர்வாகுமா? என்று யோசிக்கத்தவறிவடுகின்றார்கள் மனித உயிர் எத்தனை அற்புதமானது இதை ஒரு கணப்பொழுதில் மாய்த்து விடுகிறார்கள் ஏராளம்.

தற்கொலை செய்ய முனைபவர்கள் உண்மையிலே தம்மை மற்றவர்களிடமிருந்து பாதுகாப்பு பெறவும் அதற்கான உதவிகளை பெறுவதற்குமான சைகளைப் பல சந்தர்ப்பங்களில் அறிவிப்பார்கள் இதனைப் புரிந்துகொண்டால் மாத்திரமே நாம் அவர்களுக்கு உதவ முடியும்.மனதடுதாற்றம் என்பது யாவருக்கும் ஏற்படுகின்றது அந்த மன தடுமாற்றத்தை தடுக்கும் ஆற்றல் யாருக்கு உள்ளதோ அவர் தற்கொலையை தடுக்கும் ஆற்றல் உள்ளவா ஆவர்.நாம் மனம் தடுமாறும் போது என்ன எதிர் பார்க்கிறோம்? நம் குறையை தீர்க்க யாராவது இருக்க மாட்டார்களா என்பதுதான் இதனையே தற்கொலை செய்பவர்களும் எதிர் பார்க்கிறார்கள்.தொழில்நுட்ப வளர்ச்சிதொலைவில் இருக்கும் யாரோ ஒரு மனிதரையும் எதிர்பார்த்து பேச துணை நிற்கிறது. ஆனால் அருகில் இருக்கும் நம்மை எதிர்பார்க்கும் அன்பு உறவுகளை மறக்கச் செய்து விட்டது.இதனால் ஏற்பட்ட மன அழுத்தம் குழந்தை முதல் முதியவர் வரை தற்கொலைசெய்ய வழிவகுக்கின்றது.உரிமையோடு ஒருவரின்பிரச்சினையை காது கொடுத்து கேட்க எம்மவரில் யாருமில்லை.ஆனால் முகம் தெரியாத நபர்களையும் முகநூலில் தொடர்பு கொண்டு அரட்டையடிக்கவும் நேரில் சென்று உறவாடவும் விரும்பும் எமது சமூகம் அருகில் இருந்து எதிர்பார்க்கும் உறவுகளுக்கு ஆறுதல் கூற மறந்து விடுகிறது.

அறிவுரை கூற ஆயிரம் பேர் இருந்தாலும் காது கொடுத்து கேட்க யாரும் இல்லாத நிலையில் சிறிய பிரச்சனைகளுக்கும் தற்கொலையைத்தீர்வாக நினைக்கும்.எதிர்கால சமூகத்தின் நிலை என்னவாகும் என்று ஒருகணம் சிந்திக்க வேண்டும் தற்கொலை செய்வது தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்பட்டாலும் அதன் எண்ணிக்கை குறைவடைவதில்லை.உயிரை மாய்த்து கொள்வது எந்த ஒரு பிரச்சினைக்கும் தீர்வல்ல என்பதை கல்வி, பாடத்திட்டங்கள், விளம்பரங்கள், குறும்படங்கள் மூலம் உணர்திடவேண்டும். ஒவ்லொரு மனித உயிரும் விலை மதிப்புள்ளது நாட்டின் மொத்த சொத்தை விற்றாலும் அது ஒரு மனித உயிருக்கு ஈடாகாது அதன் மூலம் உயிரை வாங்கவோ உருவாக்கவோ முடியாது.

ஆற்றுப்படுத்தச் சரியான துணை அல்லாத காரணத்தால் நிகழும் தற்கொலைகளை நிறுத்த முன்வந்தால் சமூகத்தில் தற்கொலை செய்யும் எண்ணிக்கை குறையும். ஒருவருக்கு வேறு எதனைக் கொடுப்பதையும் விட அவரது வாழ்வின் மீதான பிடிப்பையும் நம்பிக்கையும் கொடுப்பது மிகச்சிறந்த கொடையாகும். அறிவு பொருந்திய அனைவரும் தற்கொலையை தடுக்கும் ஆற்றல் உடையவர் என்பதை உணர்ந்து மன தடுமாற்றத்ததில்சிக்கித் தவிக்கும் உள்ளங்களை ஆற்றுப்படுத்துவதன் மூலம் எதிர் காலத்தில் தற்கொலையற்ற சமூகத்தை உருவாக்குவோம். மனித உயிரின் உன்னதத்தை உணர்ந்து நிகழ்காலத்தில் நிகழவிருக்கும் தற்கொலைகளை தவிர்ப்போம். “வாழ்க்கை வாழ்வதற்கே” என்ற உண்மையை அனைவரும் உணர்ந்து செயற்படுவோம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பு : K.T. வசந்தன் BA (Hons) DRA SPL)
நேரடிக் கள ஆய்வு : (குழு ii ஒம் அணி
உள சமூக கற்கைநெறி மாணவர்கள்)



# தற்காலச் சிறுவர்களின் நிலை..........?

## (J/187 சங்குவேலி கிராமத்துச் சிறுவர்களை மையமாகக் கொண்ட கள ஆய்வுக்கண்ணோட்டம்)

**அறிமுகம் :**

இன்றைய நவீன உலகில் மனிதன் தனது தேவைகள் விருப்பங்களை நிறைவேற்றும் போது உடல், உள, சமூக நெருக்கீட்டை எதிர்கொண்டு அதிலிருந்து மீள முடியாமல் காணப்படுகின்றான். சிறுவர்களின் தேவைகள், விருப்பங்கள், எதிர்பார்ப்புக்கள் அனைத்தும் முழுமையாக நிறைவேற்றப்படாமல் காணப்படுகின்றது. தற்கால சிறுவரிடத்தே கருத்துரீதியான துஸ்பிரயோகம், சிறுவர் துஸ்பிரயோகம், மன அழுத்தம், மனவிசாரம், பெற்றோரின் குறைந்த வருமானமும் தொழிலின்மையும், பெற்றோரின் மட்டுப்படுத்தப்பட்ட கல்வி, ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறை, பிறப்பியல் மரபுவழி ரீதியான சுகாதார நிலை. பால்நிலை பாகுபாடுகள், குடும்ப, சமூக முரண்பாடுகள், சக மாணவர்களின் பாரபட்சம், குடும்ப முரண்நிலை போதிய அன்பு கிடைக்காமை என்பன உளநலத்தை பாதிக்கின்றன. தற்காலச் சிறுவர்களுக்கு சிறுவர்களது உரிமைகள், கடமைகள், தமது தேவை, எதிர்பார்ப்புக்கள், சுய விழிப்புணர்வு பற்றிய தெளிவின்மையும் சிறுவரிடையே பிறழ்வு நிலமையை தோற்றுவிக்கின்றன. இவ் உரிமை, கடமையை அறிவதால் சிறுவர்களுக்கு தன்நம்பிக்கை, சுய விழிப்புணர்வு ஏற்படுகின்றது.

**சிறுவர் உரிமைகளும் கடமைகளும் :**

பெற்றோரின் உன்னதமான சொத்துக்கள் பிள்ளைகளாவர். பெற்றோருக்கு மாத்திரமன்றி நாட்டினது மூலவளமாக சிறுவர்கள் விளங்குகின்றனர். சமூகத்தின் எதிர்காலச் சொத்தான சிறுவர்களைப் பேணிப் பாதுகாப்பது சமூகத்திலுள்ள அனைவரதும் கடப்பாடாகும். சிறுவர் நலனில் மூத்தோர், பிள்ளைகளது உடல், உள மேம்பாட்டைப் பேணல், அன்பு, பாசம், அரவணைப்பினை வழங்குதல், சிறார்கள் தம்மை விருத்தி செய்வதற்கான சந்தர்ப்பத்தை பெற்றுக் கொடுத்தல் வேண்டும். 18 வயதிலும் குறைந்த சிறுவர்களின் நலன்களை பேண ஐக்கியநாடுகள் சபையால் சிறுவர்கள் உரிமைகள் சமவாயம் உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்படுகின்றது. முதலாம், இரண்டாம் உலகப்போரில் எவ்வித சம்பந்தமும் இல்லாத இலட்சக்கணக்கான சிறுவர்கள் சித்திரவதைக்கு உள்ளாதல், அநாதைகளாதல், கொல்லப்படல் பின்னணியில் ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் பற்றிய சர்வதேச பிரகடனத்தின் பின்னர் 1989ம் ஆண்டு ஐக்கியநாடுகள் சபையால் சிறுவர் உரிமைகள் சமவாயம் உருவாக்கப்பட்டு அதன் தாக்கத்தினால் 1992 இல் சிறார்களின் கல்வி, பாதுகாப்பு. போசணை, வழிகாட்டல் மேம்படுத்தலுக்கு சாதகமான சிறுவர் உரிமைகள் தொடர்பான தேசிய சாசனம் உருவாக்கப்பட்டு சிறுவர் நலன் யுனிசெப் (UNICEF) அனுசரணையோடு சிறுவர் பாதுகாப்பு ஆணைக்குழுவின் அதிகாரத்தில் சகல பொலிஸ் நிலையங்கள், சகல பிரதேச செயலகங்களிலும் சிறுவர் அபிவிருத்தி, பெண்கள் வலுவூட்டல் அமைச்சின் கீழ் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் வழிகாட்டலில் சிறுவர் நலன் காக்கப்படுகின்றது.

சிறுவர் உரிமைகளாக பாகுபாடு காட்டுவதிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை, உயிர் வாழ்வதற்கும் முன்னேறுவதற்குமான உரிமை, பெற்றோரின் பராமரிப்பை பெறுவதற்கான உரிமை, சுதந்திரமான கருத்து வெளியிடும் உரிமை, கல்வி பெறுவதற்கான உரிமை, சித்திரவதை, இழிவான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தையிலிருந்து பாதுகாப்பு பெறும் உரிமை, பெற்றோருடன் வாழ்வதற்கும் அவர்களுடன் உறவுகளை பேணுவதற்குமான உரிமை, சமய கலாசார வழிமுறைகளை பாவிப்பதற்கான உரிமை, வாழக்கைத்தரத்தை முன்னேற்றுவதற்கான உரிமை, பாலியல், போதைப்பொருள், துஸ்பிரயோகத்திலிருந்து பாதுகாப்பு பெறும் உரிமை, கண்டித்தியம் சிறுவர்களின் கடமைகளாக பெற்றோருக்கு கட்டுப்பட்டு, முதியோரை மதித்து பொதுச் சொத்துக்களை பாதுகாத்து, சட்டம், சம்பிரதாயங்களை மதித்து, குற்றச் செயலில் ஈடுபடாது ஆரோக்கியமாக வாழ்தல் சிறார்களின் கடமையாகும்.

## சங்குவேலி கிராமச் சிறுவர்களின் தற்கால நிலை :

சங்குவேலிக் கிராமமானது வயலும் வயல் சார்ந்த மருத நிலத்தைக் கொண்டது. 5 பெரிய விவசாயக் குளங்களையும் ஒரு பகுதி எல்லையாக வழுக்கையாற்றையும் கொண்ட விவசாயக் கிராமமாகும். இக்கிராமத்தின் ஜீவனோபாயத் தொழிலாக விவசாயம் காணப்படுகின்றது. விவசாய நிலங்களை அண்டியே சிறுசிறு குடியிருப்புக்களான அந்திரான், பத்தானை, தம்மளை, கற்பக்கனை, தோறணங்கடவை, ஆலடி, சங்குவேலி தெற்கு, அமமன் கோயிலடி, சங்குவேலி வடக்கு ஆகிய குறிச்சிகளில் சுமார் 1000 குடும்பங்களைக் கொண்ட இக்கிராமத்தின் ஒரு பகுதியினர் நிலபுலன்களை உடைய செல்வந்தராகவும் ஆலடி, தோறணைக்கடவை, துரையன் தோட்டம், சங்குவேலி தெற்கு ஆகிய குறிச்சிகளில் பெருமளவு பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலையில் அரச காணிகளிலும், அடிப்படை வசதிகள் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத நிலையில் ஏழ்மையில் வாழ்ந்து வருகின்றனர்.

ஆய்வு என்பது பிரச்சினையை இனங்கண்டு அதனை வெளிப்படுத்தி தீர்வுகாண உதவுவதாக அமையவேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு எமது கள ஆய்வானது, சிறுவர்களின் தேவைகள், விருப்பங்கள், எதிர்பார்ப்புக்கள் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த 18வயதிலும் குறைந்த சிறுவரின் உடல், உள, சமூக தேவையை இனம் கண்டு அவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த கிராம மட்டத்தில் தகவல் பெறப்பட்டு தேவைகள் நிறைவேற வழி சமைக்கப்பட்டுள்ளது. இக்கள ஆய்வினை எமது குழு உறுப்பினர்கள் தயாரித்த கள ஆய்வு செயற்திட்ட அறிக்கையின் உதவியுடன் மேற்கொண்டோம். முதலில் நாம் சிறுவருடன் அணுகும் முறைகள், சிறுவரின் பிரச்சினைகள், சிறுவர் உளவியல். சிறுவரின் மனநிலை சார்பான நூல்கள், சஞ்சிகைகள், இணையம் (Net) உளவளத்துணையாளர்களின் கற்பித்தல் அனுபவம், உள சமூக கற்கைநெறி அனுபவத்தினால் குழு உறுப்பினரிடம் கலந்துரையாடி கள ஆய்வின் இலக்கினை அடைந்தோம். J/187 சங்குவேலி கிராமசேவகர் த. குணசிங்கம், சங்குவேலி அ.த.க. பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர், முன்பள்ளி சமூகத்தினர், சங்குவேலி விவசாய சம்மேளனத்தின் J/187 பட்டதாரிப் பயிலுநர்கள், குடும்பநல மாது போன்றோரின் அனுசரணையுடன் சிறுவர்களின் அடிப்படைத்தேவைகள் கூட முழுமையாக பூர்த்தி செய்யப்படாத இடங்களை இனம் கண்டு அவ்விடங்களைச் சேர்ந்த மாணவர்கள் கற்கும் பாடசாலைகள் அவர்களின் வாழ்விடங்களுக்குச் சென்று கள ஆய்வினை மேற்கொண்டோம்.

சங்குவேலி அ.த.க. பாடசாலை மாணவர்களிடையே மேற்கொண்ட கள ஆய்வில் பெரும்பான்மையான சிறார்கள் வறிய நிலையில் சாதாரண மனிதனுக்கு அவசியமான போசாக்கிற்கான உணவுகள் இன்மை, பாதுகாப்பான வாழ்விடம் இன்றி குடிநீர் வசதி, மின்சார வசதி, மலசலகூட வசதி இன்றி கற்றல் செயற்பாட்டுக்கு ஆடைகள், கற்றல் உபகரணங்கள், வீட்டில் கற்பதற்கான சூழமைவு அற்ற தன்மையுடன் பாடசாலை வரவுக்கான போக்குவரத்துப் பிரச்சினை என்ற அடிப்படைத்தேவைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் காணப்படுகின்றனர். ஒருசாதாரண மனிதனுக்கு அத்தியாவசியமான தேவைகளையே பெரும்பான்மையான சிறார்களிடையே எமது குழு மேற்கொண்ட வினாக்கொத்து, பங்குபற்றல், அவதான முறை கள ஆய்வின் மூலம் இனங் கண்டோம்.

உளநலமுடன் நாம்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்குவேலி அ.த.க. பாடசாலை மாணவர்களுடனான ஆய்வின் மூலம் வறுமையான குடும்ப மாணவர்கள், பெற்றோரை இழந்து உறவினர் பாதுகாப்பில் வாழும் மாணவர்கள், தாய், தந்தை இருவரும் இல்லாத மாணவர்கள், தந்தை அல்லது தாய் பிரிந்து சென்ற மாணவர்கள், பாதுகாப்பற்ற சூழலை உணரும் சிறார்கள் போன்ற தேவை நாடும் மாணவர்களை இனம் கண்டு அவர்களின் தேவைகள், எதிர்பார்ப்புக்கள், பிரச்சினைகள், ஆசைகள், சவால்களை ஆராய்ந்து அவர்களின் பிரச்சினையான ஏழ்மைநிலை, அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாத நிலை, பெற்றோரை பிரிந்து வாழல், தாய் அல்லது தந்தை அல்லது இருவரும் வேறு திருமணம் செய்து அன்புக்காக ஏங்கும் சிறார்களின் மன விரக்தி, உரிய அன்பு, பாதுகாப்பு கிடைக்காத சிறுவர்கள். பாடசாலை கற்றல் தேவைகளை கூட பூர்த்தி செய்ய முடியாத வறுமை நிலையும் சக மாணவரிடையே பாரபட்சம் காட்டும் தன்மையும் இனங் கண்டோம். இதனால் இம் மாணவர் களிடையே உடற் சுகாதாரமின்மை, சுய கவனிப்பின்மை, விரக்தி, போசாக்கின்மை (சோர்வு), கல்வியில் நாட்டமின்மை, சக மாணவர்களிடையே முரண்படும் நிலை போன்ற உடல், உள முரண்நிலைகளை எமது குழு ஆழமாக ஆராய்ந்து இனங்கண்டது. சிறுவர்களினது ஆழ் மனங்களிலிருந்து சில வார்த்தைகளும், உடல் வெளிப்பாடுகளும் சிறார்களின் தாழ்மை நிலையை பறைசாற்றின.

**தரம் 4 மாணவி கூறுகையில் :**

"எனக்கு நல்லாய் படிக்க விருப்பம். அப்பா இல்லை. அம்மா தான் கூலிக்கு போறவா, சிலவேளை காசில்லாட்டி விடிய பழஞ்சோறு சாப்பிட்டு தான் பள்ளிக்கூடம் வாறனான். சில வேளைகளில் கொப்பி, பேனைக்கு காசிருக்காது அம்மா, அம்மம்மாட்ட தான் வேண்டித் தாரவா" என்கிறார்.

*தரம் 5 மாணவன் கூறுமிடத்து,*

"எங்கட வீடு மண் தான் முந்தி நிஷாப் புயலுக்கு விழுந்தது. இப்பவும் திருப்பி மண் வீடு தான். எனக்கு பயமாக இருக்குது. வீடு முந்தி மாதிரி விழும் எண்டு எங்கட வீட்ட கறண்ட் இல்லை மற்ற வீடுகளிலை இருக்குது" என ஏக்கத்துடன் கூறினான்.

*தரம் 1 மாணவன் கூறுமிடத்து,*

"முதல் நாள் சமைத்த சோற்றை அடுத்த நாளும் சூடாக்கி அம்மா எனக்கும் தங்கச்சிக்கும் தாறவ. எனக்கு புத்தக பாக். சின்ன சைக்கிள் எல்லாம் வாங்க ஆசை அம்மாவால வாங்கித் தர முடியல என அழத வண்ணம் கூறினான்.

இப்பிரச்சினைகளை இனம் கண்ட மாணவர்களுக்கு எமது குழு உறுப்பினர்கள் கற்றலில் ஊக்கம் வேண்டும் என்ற மனத் தைரியத்தையும், அவர்களின் தேவைகள், எதிர்பார்புக்கள், பிரச்சினைகள் நிறைவேற ஆலோசனைகள், வழிகாட்டல். கற்றல் உபகரணங்கள் என எம்மால் இயன்ற உதவிகளை நல்கி சிறார்களின் சிறு தேவையாவது பூர்த்தி செய்தோம் என்ற மனநிறைவு ஏற்பட்டது. சிறார்களுக்கு சுய விழிப்புணர்வு, சுத்தம் பேணல், வறுமை, தற்காலிகமானது என்ற மனோதிடம், கல்வியின் அவசியம், சக மாணவர்களிடையே கலந்தரையாடி பாரபட்சத்தன்மையை நீக்கி அவர்களின் சமூகமான வாழ்விற்கு உதவினோம்.

மேலும் எமது கள ஆய்வானது பாடசாலை மாத்திரமன்றி மிகவும் வறிய நிலையில் உள்ள ஆலடி, தோறணங்கடவை, துரையன்தோட்டம் ஆகிய சிறார்களை அவர்களின் வசிப்பிடத்திற்கே நேரடியாக சென்று அவர்களின் பெற்றோர்கள், உறவினர்கள், சிறார்கள் மூலம் சிறார்களின் தற்கால நிலமையை புரிந்து கொண்டோம். ஆலடி, தோறணங்கடவையில் பல குடும்பங்கள் நிரந்தர வீடுகள் இன்றி தற்காலிக கொட்டகைகள், மின்சாரம், குடிநீர் வசதி பூர்த்தி செய்யப்படாத நிலையில் பொதுக்கிணறு, பொதுமலசலகூடத்துடன் ஏழ்மையாக வாழ்ந்து

உறவுமுடன் நாம்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றனர். அவர்களின் வீடுகள் மிக நெருக்கமாகவும், பல குடியிருப்புக்களைக் கொண்ட முகாம்களாகவும் சிறார்களின் உடல், உள, சமூகத் தேவைகள் முழுமையாக கவனிக்கப்படாமல் காணப்படுகின்றது. இங்கு நிரந்தரமான, பாதுகாப்பான வாழ்விடமோ, கற்றலுக்கான சாதக நிலைமையோ காணப்படவில்லை. சிறார்களின் பெற்றோர் வறுமை நிலமை காரணமாக கூலி வேலைக்கு செல்வதால் பிள்ளைகளிடம் அன்பு, அரவணைப்பு தேவையை பூர்த்தி செய்தல் இயலாமல் காணப்படுகின்றது.

இச்சிறார்களிடையே அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாத வறுமை, மின்சாரம், குடிநீர், போக்குவரத்து வசதி இன்மை, நெருக்கமான சுகாதார வசதிகள் குறைந்த குடியிருப்புக்கள், நோய்கள், சமுதாயப் பிரச்சினைகள் ஏற்பட வழி வகுக்கும் நிலமை, வறுமை, கல்வி அறிவின்மையால் தாய் சேய் நலன் பாதிப்புக்கள், போசணைக் குறைபாடான சிறார்கள், கல்வி, சமூக செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான சாதகமான சூழல் இன்மை, இளவயதுத் திருமணம், கணவனை இழந்து பிரிந்து வாழும் பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்களால் வாழ்க்கையை நடாத்துவதில் வறுமை நிலையையும் சிறார்கள், தாய், தந்தை, கூலி வேலைக்குச் செல்லும் போக்கினையும் இனங் கண்டோம். இச்சிறார்களிடம் நாம் மேற்கொண்ட கள ஆய்வின் மூலம் கல்வி, பாதுகாப்பு, அன்பு, அரவணைப்பு அடிப்படை வசதிகள் பூர்த்தி என ஒரு சாதாரண மனிதனுக்கு அத்தியாவசிமான எதிர்பார்ப்புக்கள் இவர்களின் ஏக்கங்களாக அமைந்தன. இச்சிறார்களின் பெற்றோருக்கு சுய தொழிலில் ஈடுபடல், சுய விழிப்புணர்வு, கல்வியை முதன்மைப்படுத்தல், ஆரோக்கியமான சுகாதாரமான வாழ்க்கை முறைமை போன்றவற்றை கடைப்பிடிப்பதற்கான விழிப்புணர்வை வழங்கினோம்.

**முடிவுரை**

காலத்தின் தேவை யாதெனில் தற்காலச் சிறார்களின் நிலையை நாம் வெறுமனே அறிக்கை இடுவதைத் தவிர்த்து தேவை நாடும் சிறார்களை இனம் கண்டு வறுமைக்குட்பட்ட சிறுவர்களை இலக்காகக் கொண்டு அவஉகளின் தேவைகள், விருப்பங்களை இனங்கண்டு அதற்கான உதவிகளை நல்கவேண்டும். எமது குழு உறுப்பினர்கள் சங்குவேலிக் கிராமச் சிறாஉகளை மையமாகக் கொண்டு பாடசாலைச் சமூகத்தினர், சிறார்கள், பெற்றோர், கிராமசேவகர், பட்டதாரிப் பயிலுனர், சமூக ஆர்வலர்களின் உதவியுடன் நேரடிக் கள ஆய்வின் மூலம் தற்காலச் சிறார்களின் நிலை என்ன? தேவை என்ன? என்ன எதிர்பார்க்கிறார்கள்? இலக்கினை அடைவதற்கான தடைகள். அத்தடைகளை தகர்வதற்கான ஆலோசனைகள், எனஎம்மால் இயன்ற உதவிகளை வழங்கினோம். சிறார்களின் வறுமையைப் போக்கவும், தன்னம்பிக்கை வாழ்வை கட்டியெழுப்பி ஆரோக்கியமாக கல்வி அறிவுள்ள பிரஜைகளை உருவாக்க அரச, அரசசார்பற்ற சமூக நிறுவனங்கள், சமூகத்தலைவர்கள், உளவியலாளர்கள் முன்வருவதே காலத்தின் கடப்பாடும் தேவையும் என்றால் மிகையாகாது.

**உசாத்துணை நூல்கள்**


1. உன்னத உளநலத்தை நோக்கி, உள சுகாதாரப் பிரிவு, சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு.
2. சிறுவர் உரிமைகள், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.
3. சுக வாழ்க்கை-பாகம் 3, கா.வைத்தீஸ்வரன், உள ஆலோசகர் பதிப்பு-2009.

நேர்கண்டோர்.

- J/87 சங்குவேலி கிராம அலுவலர்.
- குடும்பநல மாது - சங்குவேலி
- சங்குவேலி அ.த.க.பாடசாலை சமூகத்தினர்
- சங்குவேலிக் கிராம பெற்றோர், சிறுவர்கள்
- சங்குவேலிக் கிராமசேவகர் பிரிவிலுள்ள பட்டதாரிப் பயிலுனர்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் சிந்தனைக்கு...........

## சிறுவர் உளநலத்தை பாதிக்கும் காரணிகள்

- கருத்து ரீதியான துஸ்பிரயோகம்
- சிறுவர் துஸ்பிரயோகம்
- மன அழுத்தம்
- பெற்றோரின் தொழிலின்மை
- பெற்றோரின் குறைந்த வருமானம்
- பெற்றோரின் மட்டுப்படுத்தப்பட்ட கல்வி
- பால்நிலை பாகுபாடு
- ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறை
- மனித உரிமை மீறல்கள்
- குடும்ப முரண்பாடுகள்
- சக மாணவர்களின் பாராபட்சம்
- குடும்பத்தில் போதிய அன்பு கிடைக்காமை
- பிறப்பியல் மரபு வழி ரீதியான சுகாதார நிலை

"பெற்றோரின் அடிப்படை தேவைகள் பூர்த்தியே

சிறுவரின் சமுதாய மேம்பாடாகும்."

கங்கை பிறிண்டேர்ஸ், 743, கே.கே. எஸ் றோட் (யாழ். இந்துக்கல்லூரிக்கு முன்பாக) யாழ். 0776184567

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org